RS Polyclinic
OUR ESTEEMED DOCTORS
Dr M. Rajkumar — MBBS MS DNB MCH (vascular) — 98410 25996 — Sr Vascular Surgeon
Dr K. Namitha Bhuvaneswari — MS (Opthal) DO MBA — 9444 288784 — Sr Eye Surgeon
Dr Sathish Rajkumar — MBBS MS FMAS — 9445 401793 — Laparoscopic & Laser Surgeon
Dr Shanthi R — MBBS MS MCH (vascular) — 9884 650945 — Sr Vascular Surgeon
Dr Salins R — MBBS MD — 87780 87742 — General Physician
Dr Praveena E — MBBS MS (ENT) — 9944 100443 — Sr ENT Surgeon

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmil.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
8148231942 / 8144337349
11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.

தொகுதி - 6 | நாளிதழ் | 4 பக்கங்கள் சென்னை, 8 நவம்பர் 2026 ரூ.2/- இதழ் - 119

தொழில் வளர்ச்சிக்கு வலுவான அடித்தளமிடும் இந்தியாவின் ரசாயனங்கள், பெட்ரோ ரசாயனங்கள் துறை

சென்னை – 8 நவம்பர், 2026

இந்தியாவின் ரசாயனங்கள், பெட்ரோ ரசாயனங்கள் துறை, உற்பத்தி, முதலீடு, ஆராய்ச்சி, தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றில் வேகமாக முன்னேறி வருகிறது. இத்துறையை உலக அளவில் போட்டியிடும் வலிமையான தொழில் துறையாக உருவாக்க மத்திய அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

உலக அளவில் இந்தியாவின் முக்கியத்துவம்:

உலகின் 6-வது பெரிய ரசாயன உற்பத்தி நாடாகவும், ஆசியாவின் 4-வது பெரிய நாடாகவும் இந்தியா உள்ளது. இத்துறையின் தற்போதைய மதிப்பு 220 பில்லியன் அமெரிக்க டாலர். இது 2030-ல் 300 பில்லியன் டாலராகவும், 2040-ல் ஒரு டிரில்லியன் டாலராகவும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. சாயங்கள் உற்பத்தி, ஏற்றுமதியில் 2-வது இடத்திலும், வேளாண் ரசாயனங்கள் ஏற்றுமதியில் 3-வது இடத்திலும் இந்தியா உள்ளது. இத்துறையில் 13,000 பெரிய நிறுவனங்களும், 4.45 லட்சம் குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களும் உள்ளன.

முதலீடும் உற்பத்தியும்:

பெரும்பாலான ரசாயனத் துறைகளில் 100 சதவீத அந்நிய நேரடி முதலீட்டுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 2014–2026 காலகட்டத்தில் ரூ.1,04,895 கோடி முதலீடு ஈர்க்கப்பட்டுள்ளது. இது 2004–2014 காலகட்டத்தில் ஈர்க்கப்பட்ட ரூ.45,240 கோடியைவிட இரு மடங்குக்கும் அதிகம். முக்கிய ரசாயனங்கள், பெட்ரோ ரசாயனங்கள் உற்பத்தி 2015–16-ல் 4.56 கோடி டன்னிலிருந்து 2024–25-ல் 5.86 கோடி டன்னாக உயர்ந்துள்ளது.

தொழிற்பூங்காக்களும் வேலைவாய்ப்பும்:

தீபாவளி, கோவர்தன் பூஜை, பாய் தூஜ் ஆகிய பண்டிகைகளை முன்னிட்டு மக்களவைத் தலைவர் வாழ்த்து

சென்னை – 8 நவம்பர், 2026

மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா தீபாவளி, கோவர்தன் பூஜை, பாய் தூஜ் ஆகிய பண்டிகைகளை முன்னிட்டு வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

ஓம் பிர்லா தமது வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது:

“மகிழ்ச்சியின் மாபெரும் திருவிழாவான தீபாவளியை முன்னிட்டு அனைவருக்கும் மனமார்ந்த வாழ்த்துகள். மேலும், கோவர்தன பூஜை, பாய் தூஜ் பண்டிகைகளுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தீபாவளி என்பது வெறும் விளக்கேற்றி கொண்டாடும் ஒரு பண்டிகை மட்டுமல்ல. அது மற்றவர்களின் வாழ்வில் நம்பிக்கை, மகிழ்ச்சி எனும் ஒளியை நிரப்புவதற்கான ஒரு வாய்ப்பும் ஆகும்.

ஒரு விளக்கு சுற்றிலும் ஒளியைப் பரப்புவதைப் போல, நமது மகிழ்ச்சி மற்றவர்களின் வாழ்வில் மகிழ்ச்சியைக் கொண்டுவருவதை உறுதிசெய்ய, நாம் முயற்சி செய்வோம். நமது சொந்தக் குடும்பத்தினரின் முகத்தில் மட்டுமல்லாமல், அனைவரது முகங்களிலும் புன்னகையைக் கொண்டுவர உறுதியேற்போம். தேவையுள்ளவர்களுக்கு உதவுங்கள். அவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளுங்கள். சமூகத்தில் அன்பு, நல்லிணக்கம் பரஸ்பர ஒத்துழைப்பை வளர்த்தெடுங்கள்.

நம்மைச் சுற்றியுள்ள எவரும் தனிமையாகவோ அல்லது புறக்கணிக்கப்பட்டதாகவோ உணராதபோதுதான் நமது தீபாவளி உண்மையான அர்த்தமுள்ளதாக அமையும்.

இந்த மங்களகரமான நாளில், நாட்டின் எல்லைகளைக் காக்கும் நமது வீரமிக்க படைவீரர்களுக்கும், நாட்டின் தானியக் களஞ்சியங்களை நிரப்பும் நமது விவசாய சகோதரர்களுக்கும், தேசத்தைக் கட்டியெழுப்பும் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கும், தொழில்முனைவோருக்கும், வணிகர்களுக்கும், நாட்டு மக்கள் அனைவருக்கும் சிறப்பு வணக்கங்கள்.

இ20 பெட்ரோலில் எத்தனாலின் அளவு நிர்ணயிக்கப்பட்ட அளவிலேயே உள்ளது: பரிசோதனையில் உறுதி

சென்னை – 8 நவம்பர், 2026

கர்நாடகாவில் சில பெட்ரோல் விற்பனை நிலையங்களில் விற்கப்படும் இ20 பெட்ரோலில் 26 முதல் 31 சதவீதம் வரை எத்தனால் கலந்திருப்பதாக வெளியான குற்றச்சாட்டுகளுக்கு மத்திய பெட்ரோலிய அமைச்சகம் மறுப்பு தெரிவித்துள்ளது. பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் விநியோகிக்கும் பெட்ரோல் நிர்ணயிக்கப்பட்ட தரத்திலேயே இருப்பதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தியன் ஆயில், பாரத் பெட்ரோலியம், ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் ஆகிய மூன்று நிறுவனங்களும் விநியோகிக்கும் இ20 பெட்ரோல், இந்திய தர நிர்ணய அமைப்பின் விதிமுறைகளுக்கு உட்பட்டுள்ளது.

மத்திய அரசின் கண்காணிப்பில் 27 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட 893 பெட்ரோல் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டன. இதில் அனைத்திலும் எத்தனால் அளவு 19 முதல் 21 சதவீதத்திற்குள் இருந்தது.

கர்நாடகாவில் பரிசோதிக்கப்பட்ட 56 மாதிரிகளிலும் 19 முதல் 20 சதவீதம் மட்டுமே இருந்தது. சராசரி அளவு 19.30 சதவீதமாகும்.

கர்நாடகாவில் இதற்கு முன்பு, அக்டோபர் மாதம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் எண்ணெய் நிறுவனப் பிரதிநிதிகள் பங்கேற்கவில்லை என்றும், முறையான மாதிரி சேகரிப்பு நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை என்றும் எண்ணெய் நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. மேலும், பரிசோதனை அறிக்கைகளில் தேவையான தொழில்நுட்ப விவரங்கள் இல்லை என்றும் அவை சுட்டிக்காட்டியுள்ளன. எனவே, மாதிரிகளைச் சேகரித்து, அங்கீகரிக்கப்பட்ட ஆய்வகத்தில் மீண்டும் பரிசோதிக்க வேண்டும் எனக் கோரியுள்ளன.

இ20 பெட்ரோலால் வாகனங்களின் மைலேஜ் 10 சதவீதம் குறையும் என்ற கணிப்பு அறிவியல் அடிப்படையற்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு வாழ்த்து

சென்னை – 8 நவம்பர், 2026

குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு நாட்டு மக்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள தீபாவளி வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது:

"புனிதமான தீபாவளி நன்னாள் அன்று, இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் வாழும் அனைத்து இந்தியர்களுக்கும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ராவணனை வென்ற பிறகு பகவான் ஸ்ரீ ராமர் அயோத்திக்குத் திரும்பியதை அடுத்து, ஆனந்தக் கொண்டாட்டங்கள் நடைபெற்றன. வரிசையாக ஏற்றப்பட்டிருந்த அழகிய விளக்குகளை பகவான் ஸ்ரீ ராமர் கண்டுகளித்தார். இதுவே தீபாவளியின் கலாச்சார, பக்தி முக்கியத்துவம் ஆகும். இது ராமராஜ்யத்தின் மங்களகரமான தொடக்கத்தையும் குறிக்கிறது.

தீபாவளி பண்டிகையானது, எதிர்மறைப் போக்குகளை, நற்குணங்கள் வெல்வதைக் குறிக்கிறது. இது துன்பங்களின் முடிவையும், மகிழ்ச்சியான, செழிப்பான வாழ்வின் தொடக்கத்தையும் உணர்த்துகிறது. இந்த நன்னாளில், மக்கள் மங்களகரமான தொடக்கத்திற்காகவும் நல்வாழ்விற்காகவும் பகவான் கணேசரையும், செழிப்புக்காக மகாலட்சுமி மாதாவையும் வழிபடுகின்றனர். அனைவரின் மகிழ்ச்சிக்காகவும் பிரார்த்தனைகள் செய்யப்படுகின்றன.

நம் நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் நல்ல ஆரோக்கியம், மகிழ்ச்சி, செழிப்பு கிடைக்க வாழ்த்துகிறேன். நாம் சுற்றுச்சூழலைப் பாதுகாத்து, நல்லிணக்கத்துடன் வாழ்வோம். மேலும், இந்திய விழுமியங்களால் வழிநடத்தப்படும் நமது தேசபக்தி மிக்க இளைஞர்கள், வளர்ச்சியடைந்த பாரதத்தைக் கட்டமைப்பதில் ஆர்வத்துடன் பங்களிக்கட்டும்."

தலைமைப் பண்பில் நற்பண்புகள், தனிநபர் திறன் ஆகியவற்றை மேம்படுத்த சட்டத் துறையினருக்கு பயிற்சி

சென்னை – 8 நவம்பர், 2026

மத்திய சட்டம், நீதித்துறை அமைச்சகத்தின் சட்டமியற்றல் துறை, அதிகாரிகளின் தலைமைப் பண்பையும் நிர்வாகத் திறனையும் மேம்படுத்தும் நோக்கில் கலந்துரையாடல் தொடர் நிகழ்ச்சியைத் தொடங்கியுள்ளது.

இதன் முதல் அமர்வு நேற்று முன்தினம் (நவம்பர் 5, 2026) புதுதில்லி கர்தவ்ய பவன்-2-ல் நடைபெற்றது. சட்டத் துறை கூடுதல் செயலர் டாக்டர் மனோஜ் குமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கூடுதல் செயலர் அகாலி வி. காங்காய் தலைமைப் பண்பில் நற்பண்புகள் மற்றும் தனிநபர் திறனை மேம்படுத்துவது குறித்து உரையாற்றினார்.

தலைமைப் பண்பு என்பது, பதவியாலும் அதிகாரத்தாலும் மட்டுமல்லாமல், நேர்மை, பணிவு, பொறுப்புணர்வு, ஒத்துழைப்பு, சிறந்த தகவல் தொடர்பு, பிறரை ஊக்குவிக்கும் செயல்பாடுகள் ஆகிநவற்றால் உண்மையான தலைமை பண்பு உருவாகிறது என்று அவர் கூறினார். தலைமைப் பண்புக்கான 5 முக்கிய அம்சங்களாக நிலைத்தன்மை, பண்பாடு, பங்களிப்பு, சமூகப் பொறுப்பு, ஆர்வத்துடன் கற்றல் ஆகியவற்றை அவர் விளக்கினார்.

இந்நிகழ்வில் 80-க்கும் மேற்பட்ட அதிகாரிகள் பங்கேற்றனர். அனுபவப் பகிர்வையும் சிறந்த நிர்வாக நடைமுறைகளையும் ஊக்குவிக்க இக்கலந்துரையாடல் தொடர் தொடர்ந்து நடத்தப்பட உள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு தீபாவளி வாழ்த்து

சென்னை – 8 நவம்பர், 2026

பிரதமர் நரேந்திர மோடி, தீபாவளி பண்டிகையை முன்னிட்டு வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

தீபங்களின் திருவிழா நாடு முழுவதையும் ஒளிரச் செய்து, இருளை வெல்லும் உறுதியைப் பிரதிபலிக்கிறது என்று பிரதமர் கூறியுள்ளார். இத்திருவிழாவும், வரவிருக்கும் காலங்களும் அனைவருக்கும் மகிழ்ச்சி, அமைதி, செழிப்பு ஆகியவற்றைக் கொண்டுவரட்டும் என அவர் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

தாம் தீபாவளியை மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடுவதாகவும், கடந்த ஆண்டுகளைப் போலவே இந்த ஆண்டும் நாட்டின் துணிச்சல் மிக்க பாதுகாப்புப் படை வீரர்களுடன் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடும் பாரம்பரியத்தைத் தொடரப்போவதாகவும் நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள் என பதிவிட்டுள்ள பிரதமர், தீபாவளி வாழ்த்து தொடர்பான தமது காணொலிப் பதிவையும் பகிர்ந்துள்ளார்.

முத்துப்பேட்டை அலையாத்திகாட்டிற்கு நாளை (நவ.8) தீபாவளியன்று சுற்றுலா செல்ல தடை



திருவாரூர் – 8 நவம்பர், 2026 தென்கிழக்கு அரபிக்கடல் பகுதியில் வளிமண்டல சுழற்சி நிலவுவதால் இதன் காரணமாக, திருவாரூர் மாவட்டத்தில் நாளை (நவ.8) தீபாவளியன்று இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளதால் நாளை ஒரு நாள் முத்துப்பேட்டை அலையாத்திகாட்டிற்கு சுற்றுலா செல்ல தடை செய்யப்பட்டுள்ளதாகவும் சுற்றுலா பயணிகள் இங்கு வந்து ஏமார்ந்து செல்ல வேண்டாம் என முத்துப்பேட்டை வனசரக அலுவலர் சதீஷ்கண்ணன் கூறினார்

புதிய அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள பாதுகாப்புப் படைகள் தயார் நிலையில் இருக்க வேண்டும் மத்திய

சென்னை – 8 நவம்பர், 2026 புதிய அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள பாதுகாப்புப் படைகள் தயார் நிலையில் இருக்க வேண்டும் மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங். தீபாவளியை முன்னிட்டு மேற்கு வங்கத்தின் பாக்டோக்ரா விமானப்படைத் தளத்தில் விமானப்படை வீரர்களை இன்று (07.11.2026) சந்தித்த பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், புதிய அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள முப்படைகளும் எப்போதும் தயார் நிலையில் இருக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

எல்லைகளில் உருவாகும் போர் மட்டுமின்றி, மறைமுகப் போர், இணையவழித் தாக்குதல், ஆளில்லா விமானங்கள் மூலம் தாக்குதல், தவறான தகவல்களைப் பரப்புதல் போன்ற புதிய சவால்களும் அதிகரித்து வருவதாக அவர் தெரிவித்தார். குறிப்பாக, இணையவழித் தாக்குதல்களைத் தடுப்பது, தகவல்களின் நம்பகத்தன்மையைப் பாதுகாப்பது ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் கூறினார்.

பாக்டோக்ரா பகுதி, குறிப்பாக வடகிழக்கு மாநிலங்களின் பாதுகாப்புக்கு முக்கியமானது என்றும், இங்கு பணியாற்றும் விமானப்படை வீரர்கள் கிழக்குப் பிராந்தியத்தின் பாதுகாப்புக் கேடயமாகத் திகழ்கிறார்கள் என்றும் அவர் பாராட்டினார். உள்ளூர் மக்களுடன் நல்லுறவை வளர்த்து, அவர்களின் நம்பிக்கையைப் பெறுவதன் மூலம் எதிரிகளின் சதித்திட்டங்களை முறியடிக்க முடியும் என்றும் அமைச்சர் கூறினார்.

உள்நாட்டிலேயே நவீன ராணுவத் தொழில்நுட்ப சாதனங்களைத் தயாரிப்பதில் இந்திய நிறுவனங்களின் பங்களிப்பு அதிகரித்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும், அக்னிவீரர்களுக்கான இரண்டாவது பணிக்காலத் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்திருப்பது குறிப்பிடத்தக்க தீபாவளிப் பரிசு என்று அவர் கூறினார்.

விமானப்படை வீரர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் தீபாவளி வாழ்த்துகளைத் தெரிவித்த அவர், நாட்டின் பாதுகாப்புக்காகப் பணியாற்றும் வீரர்களின் குடும்ப நலனிலும் அரசு அக்கறை கொண்டுள்ளதாகத் தெரிவித்தார்.



கோவை பெரியார் அறிவுலக புத்தக கொள்முதல் முறைகேடு குறித்து விசாரிக்க பல்வேறு கேள்விகளை முன்வைத்து லஞ்ச ஒழிப்புத் துறையிடம் திமுக புகார்!

சென்னை – 8 நவம்பர், 2026 கோவை பெரியார் அறிவுலக புத்தக கொள்முதல் முறைகேடு குறித்து விசாரிக்க பல்வேறு கேள்விகளை முன்வைத்து லஞ்ச ஒழிப்புத் துறையிடம் திமுக புகார் அளித்துள்ளது.

கோவை ‘பெரியார் அறிவுலகத்தில்’ புத்தக கொள்முதல் நடைபெற்றதில் ஊழல் குறித்து விசாரிக்க திமுக சார்பில் தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளர் ஐ.பரந்தாமன் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநருக்கு அனுப்பிய புகார் மனு விவரம்.

கோவை பெரியார் அறிவுலகத்தில் புத்தக கொள்முதல் நடைபெற்றதில் ஊழல் குறித்து விசாரிக்க திமுக சார்பில் ஊழல் தடுப்பிரிவில் புகார்

கோவை பெரியார் அறிவுலகத்தில் புத்தக கொள்முதல் நடைபெற்றதில் ஊழல் குறித்து விசாரிக்க திமுக சார்பில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரிடம் இன்று புகார் அளிக்கப்பட்டுள்ளது.

பின்வரும் கேள்விகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

இந்த புத்தகங்களுக்கான கொள்முதல் / வாங்குதல் ஆர்டர்களை (procurement / purchase orders) வழங்கிய அதிகாரிகள் யார்?

புத்தகங்கள் ஒவ்வொன்றாக மதிப்பீடு செய்யப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்டு வாங்கப்பட்டதா அல்லது மொத்தமாக (in bulk batches) வாங்கப்பட்டதா?

இந்த பதிப்பகங்களுக்கு கொள்முதல் ஆர்டர்கள் எந்த தேதிகளில் வழங்கப்பட்டன?

கொள்முதலுக்கான குறிப்பு கோப்பை (note file) தொடங்கிய, கையெழுத்திட்ட மற்றும் ஒப்புதல் அளித்த அதிகாரிகள் யார்?

இந்த கொள்முதலுக்கு தகுதிவாய்ந்த புத்தகத் தேர்வு / கொள்முதல் குழு (Book Selection / Purchase Committee) ஒப்புதல் அளித்ததா, மேலும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறை பின்பற்றப்பட்டதா?



த்ரிஷா விஜய், சங்கீதா விஜய், தாமரை பன்னீர், தாமரை முரளி, மோனிகா ரவி ஆர். மற்றும் பிற பெயர்களைக் கொண்ட எழுத்தாளர்கள் உண்மையில் இருக்கிறார்களா?

புத்தகங்கள் எந்த தேதிகளில் விநியோகிக்கப்பட்டன, அவை பெறப்பட்டவுடன் அவற்றின் தரம் மற்றும் அளவு சரிபார்க்கப்பட்டதா?

ஒவ்வொரு பதிப்பகத்திற்கும் எந்த தேதிகளில், எவ்வளவு தொகை வழங்கப்பட்டது?

.

வெள்ளை மாளிகை அருகே தீவிர விசாரணை; டிரம்பை சுட்டுக்கொல்ல வந்த வெனிசுலா இளைஞர் கைது: காரில் இருந்த துப்பாக்கிகள் பறிமுதல்

சென்னை – 8 நவம்பர், 2026 அமெரிக்க அதிபர் டிரம்பை சுட்டுக் கொல்ல சதித்திட்டம் தீட்டி ஆயுதங்களுடன் சுற்றித் திரிந்த வெனிசுலா நாட்டைச் சேர்ந்த வாலிபர் அதிரடியாக கைது செய்யப்பட்டார். அமெரிக்க அதிபர் தேர்தல் பிரசாரத்தின் போது டிரம்ப் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூடு தாக்குதல் சர்வதேச அளவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. இந்த சூழலில் வாஷிங்டனில் உள்ள வெள்ளை மாளிகை வளாகத்திற்கு அருகே அதிபர் பாதுகாப்பு பிரிவு போலீசார் வழக்கமான இரவு நேர ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

அப்போது கான்ஸ்டிடியூஷன் அவென்யூ பகுதியில் சந்தேகத்திற்கு இடமான வகையில் நின்றுகொண்டிருந்த பிக்கப் வாகனத்தை பாதுகாப்பு அதிகாரிகள் சுற்றி வளைத்தனர். அந்த வாகனத்தில் இருந்த வெனிசுலா நாட்டைச் சேர்ந்த ரோனி யோர்ட்ரிக்ஸ் குவானிபா சினோஸ் (26) என்பவரிடம் அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தினர். வாகனத்தை சோதனையிட்ட போது அது திருடப்பட்ட கார் என்பது அம்பலமானது. மேலும் காரில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த அதிநவீன ஏஆர்-15 ரக துப்பாக்கி, மெஷின் பிஸ்டல், கைத்துப்பாக்கி ஆகிய 3 பயங்கர ஆயுதங்கள் மற்றும் ஏராளமான தோட்டாக்களை பாதுகாப்பு படையினர் பறிமுதல் செய்தனர்.

விசாரணையில் அந்த குற்றவாளி, தனது மனதில் எழுந்த விசித்திர குரல்கள் அதிபர் டிரம்பை நேரில் சென்று சுட்டுக் கொல்லுமாறு உத்தரவிட்டதாக கூறி அதிகாரிகளை அதிரவைத்தார். கடந்த 2024ம் ஆண்டு மார்ச் மாதம் டெக்சாஸ் எல்லை வழியாக சட்டவிரோதமாக அமெரிக்காவிற்குள் நுழைந்த இந்த நபர் மீது



திருட்டு மற்றும் அனுமதியின்றி ஆயுதங்கள் வைத்திருந்த பிரிவுகளில் வழக்குகள் பதியப்பட்டுள்ளன. இதுகுறித்து அமெரிக்க ரகசிய பாதுகாப்பு பிரிவு இயக்குனர் சீன் குர்ரன் கூறுகையில், ‘வெள்ளை மாளிகை வளாகத்தை குறிவைத்து ஆயுதங்களுடன் வரும் நபர்களால் பாதுகாப்பு அச்சுறுத்தல் தொடர்ந்து அதிகரித்து வருகிறது’ என்று தெரிவித்தார்.

ஐரோப்பிய யூனியனின் ஆராய்ச்சி திட்டத்தில், இந்தியா இணைவதற்குப் பேச்சுவார்த்தை

சென்னை – 8 நவம்பர், 2026 ஐரோப்பிய யூனியனின் ‘ஹொரைசன் ஐரோப்பா’ (Horizon Europe) ஆராய்ச்சி, புத்தாக்கத் திட்டத்தில் இந்தியா இணைவதற்கான பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளன.

இதன் மூலம் இந்திய ஆராய்ச்சியாளர்கள், கல்வி நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் கூட்டு ஆராய்ச்சித் திட்டங்களில் பங்கேற்று நிதியுதவி பெறவும், ஐரோப்பிய ஆராய்ச்சிக் குழுக்களின் நவீன ஆராய்ச்சி வசதிகளைப் பயன்படுத்தவும் வாய்ப்பு கிடைக்கும்.

மேலும், ஆராய்ச்சியாளர்களின் பரிமாற்றம், புதிய தீர்வுகளை இணைந்து உருவாக்குதல் ஆகிய செயல்பாடுள் அதிகரிக்கும். சுகாதாரம், டிஜிட்டல் தொழில்நுட்பம், தொழில்துறை, விண்வெளி, பருவநிலை, எரிசக்தி, போக்குவரத்து, உணவு, உயிரி பொருளாதாரம் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பு அதிகரிக்கப்படும்.

2026 ஜனவரி 27-ல் நடைபெற்ற இந்தியா–ஐரோப்பிய யூனியன் உச்சி மாநாட்டைத் தொடர்ந்து இந்த பேச்சுவார்த்தை தொடங்கப்பட்டது.

Printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers, No.191, 212, Khaja Khan Bhandar Street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.
Editor: R.SATHYANARAYANAN

நூலகங்களில் கூட கோடிக்கணக்கில் ஊழல் நடந்திருப்பது எள்ளளவும் ஏற்றுக்கொள்ள முடியாது: எடப்பாடி பழனிசாமி

சென்னை – 8 நவம்பர், 2026 ரிப்பன் வெட்டி திறப்பு விழாவில் நடித்துவிட்டு போனால் மட்டும் கடமை முடிந்தது என விஜய் நினைத்தாரா..? நூலகங்களில் கூட கோடிக்கணக்கில் ஊழல் நடந்திருப்பது எள்ளளவும் ஏற்றுக்கொள்ள முடியாது அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்;

கோவையில் சமீபத்தில் திறக்கப்பட்ட "பெரியார் அறிவுலகத்தில்" நூல்கள் கொள்முதல் செய்யப்பட்டதில் பல கோடி ரூபாய் அளவிற்கு ஊழல் நடைபெற்றுள்ளதாக எழுத்தாளர் பெருமாள் முருகன் குற்றம் சாட்டியுள்ளது கடும் அதிர்ச்சியளிக்கிறது. மக்களின் சிந்தனையை மேம்படுத்தவும், அறிவுப் பசியைப் போக்கவும் பயன்பட வேண்டிய நூலகங்களில் கூட கோடிக்கணக்கில் ஊழல் நடந்திருப்பது என்பது எள்ளளவும் ஏற்றுக்கொள்ள முடியாதது.

போலி பிம்பங்களை உருவாக்கி, 'பொய்க்கால் குதிரை' அரசை நடத்தி வரும் ரீல் முதல்வர் விஜய் சமீபத்தில்தான் இந்த பெரியார் அறிவுலக கட்டிடத்தினை திறந்து வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ரோடு ஷோ நடத்துவதிலும், கேமராக்களுக்கு முன்னால் கையசைத்து ஆக்ஷன் செய்வதிலும் காட்டும் ஆர்வம், சிறிதளவாவது தான் திறந்து வைக்கும் நூலகத்தில் நூல்கள் சரியாக கொள்முதல் செய்யப்பட்டுள்ளதா, அதற்கான உள்கட்டமைப்பு சரியாக உள்ளதா என்பதை ஆராய்வதில் இருந்திருக்க வேண்டாமா?

சினிமா ஷூட்டிங் போல மேக்கப் போட்டு ரெடியாகி வந்து ரிப்பன் வெட்டி திறப்புவிழா நிகழ்ச்சியில் நடித்துவிட்டு போய்விட்டால் மட்டும் தன் கடமை முடிந்துவிட்டது என முதல்வர் நினைத்துக் கொண்டாரா என்ன? சென்ற ஆட்சியின் திட்டம் என்று இப்போது வாய்கிழிய பேசும் இதே ஆட்சியாளர்களின் வாய்கள், திறப்பு விழாவின் போது பேசிய பேச்சுகள் எல்லாம் நினைவிருக்கிறதா?

இன்று செய்தியாளர் சந்திப்பு நடத்தி இவ்வளவு பேசும் இந்த அரசு, நூலகம் திறக்கும் முன் வந்த நூல்களை சரிபார்த்திருக்க வேண்டாமா? தங்கள் கொள்கைத் தலைவர் பெயரில் ஒரு நூலகம், நேரடியாக முதல்வரே திறந்தாலும் கூட, ஒரு குறைந்தபட்ச ஆய்வை கூட இந்த அரசு செய்யாமல் அக்கறை அற்று இருந்திருப்பதும் தவறு தானே!

அதுமட்டுமல்லாமல், ஒருபுறம் தவறு செய்தது நாங்கள் இல்லை திமுகதான் என ஆளுங்கட்சியும், மறுபுறம் தவறு செய்தது நாங்கள் இல்லை தவெகதான் என திமுகவும் மாறி மாறி குற்றம் சாட்டி மக்களை குழப்பி வருகின்றன. தானும் குழம்பி, மக்களையும் குழப்பி, தமிழகத்தை ஒரு தொடர் குழப்பநிலைக்கு இவர்கள் தள்ளிவிட்டனர்.

இந்த குழப்பநிலை ஒன்றும் இந்த குழம்பி போன பொய்க்கால் குதிரை அரசுக்கு புதிதல்ல. ஒரு யூனிட் மின்சாரம் ரூ.20-க்கு வாங்குவது ஊழல் என்று அன்று சட்டமன்றத்தில் கூச்சலிட்ட அதே மின்சாரத் துறை அமைச்சர், இன்று ஒரு யூனிட் மின்சாரத்தை ரூ.40 வரை கொடுத்து கொள்முதல் செய்து மக்கள் வரிப் பணத்தை சூறையாடிக் கொண்டிருக்கிறார். இது ஊழல் இல்லையா? மக்களை ஏமாற்றும் பச்சைப்பொய் இல்லையா?

தார் மற்றும் கட்டுமானப் பொருட்களின் விலை அதிகம் என்று காரணம் கூறி, பொதுப்பணித்துறை அமைச்சர் அன்று டெண்டர்களை ரத்து செய்தார். ஆனால் அன்று ஒரு டன் ரூ.48,000-க்கு இருந்த தார் விலை இன்று ₹1,00,000-ஐ தொட்டு விண்ணை முட்டும் அளவிற்கு உயர்ந்துவிட்டது. இன்று வரை புதிய டெண்டர்களும் விடப்படவில்லை, பணிகளும் நடக்கவில்லை. அப்படியென்றால் அன்று டெண்டரை ரத்து செய்ததால் யாருக்கு என்ன லாபம்? இது மக்களைக் குழப்பும் செயலில்லையா?



எனவே பெரியார் அறிவுலக ஊழல் விவகாரத்தில் தவெக அரசாக இருந்தாலும் சரி இல்லை முந்தைய திமுக அரசாக இருந்தாலும் சரி, தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது சட்டப்பூர்வமான கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதே எங்களின் நிலைப்பாடு! எனவே,பெரியார் அறிவுலக நூல் கொள்முதல் ஊழல் குறித்து உடனடியாக ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையில் ஒரு விசாரணை ஆணையம் அமைத்து, இந்த ஊழலில் தொடர்புடைய அனைவர் மீதும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்த பொய்க்கால் குதிரை அரசை அதிமுக சார்பில் வலியுறுத்துகிறேன்.

பண்ருட்டி அருகே பயங்கர விபத்து; பட்டாசு கடை,குடோன் வெடித்து சிதறல்; 7 பேர் படுகாயம்

கடலூர் – 8 நவம்பர், 2026 கடலூர் மாவட்டம் பண்ருட்டி அருகே உள்ள முத்தாண்டி குப்பம், நெய்வேலி சாலையில் செடுத்தான் குப்பம் பகுதியில் காசி அம்மாள் பயர் ஒர்க்ஸ் உள்ளது. இங்கு தீபாவளியை முன்னிட்டு வாசலில் பட்டாசு கடை வைத்திருந்தனர். இந்த பட்டாசு கடையில் நேற்று திடீரென தீப்பிடித்தது. கடையில் இருந்த பட்டாசுகள் வெடித்து சிதறின. தீ அருகில் இருந்த குடோனுக்கு பரவியது. குடோனில் இருந்த பட்டாசுகளும் வெடித்து சிதறின. இதில் பட்டாசு கடையில் விற்பனைக்காக பணியில் இருந்த சுகந்தி (40), பிரியதர்ஷினி (22) பிரவீன் (20)உள்பட பட்டாசு வாங்க வந்த சுப்பிரமணியன் (50) கருணா மூர்த்தி (52),சக்கரபாணி (65)பிரிய தர்ஷினி (22),சுகந்தி (40),பிரவீன் (25),ரவி (25) ஆகியோர் உள்பட ஏழு பேர் படுகாயம் அடைந்தனர். ஆபத்தான நிலையில் இருந்த அவர்களை 108 ஆம்புலன்ஸ் மூலம் பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக கடலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இது பற்றி தகவல் அறிந்ததும் பண்ருட்டி துணை போலீஸ் சூப்பிரண்டு ரகுபதி, காடாம்புலியூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் தர்மலிங்கம், சப்-இன்ஸ்பெக்டர் வேல்முருகன் மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் கொடுத்தனர். முத்தாண்டி குப்பம் நிலையதீயணைப்பு வீரர்கள் விரைந்து சென்று மேலும் தீ பரவாமல் தடுத்து அணைத்தனர். இந்த விபத்தில் சுமார் பலலட்சம் ரூபாய் மதிப்பிலான பட்டாசு பொருட்கள் வெடித்து, கடை முழுவதும் சேதம் அடைந்தது. இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



சேலம் கொளத்தூரில் உள்ள அரசு நிலத்தில் ஆக்கிரமிப்புகளை 8 வாரங்களில் அகற்ற வேண்டும்: உயர்நீதிமன்றம் உத்தரவு

சேலம் – 8 நவம்பர், 2026 சேலம் மாவட்டம் மேட்டூரை அடுத்த கொளத்தூரில் உள்ள நூலகத் தெருவில் புறம்போக்கு நிலத்தை கொளத்தூர் பெரிய மாரியம்மன் கோயிலின் நிர்வாகம் ஆக்கிரமித்து இரும்பு மற்றும் சிமெண்டால் கிரில் அமைத்ததுடன் அங்கு நிறுத்திவைக்கப்பட்டுள்ள கோயிலின் தேரை வேறு இடத்துக்கு கொண்டுசெல்வது தொடர்பாக அனைத்து தரப்புக்கும் வாய்ப்பளித்து விசாரணை நடத்தி ஆக்கிரமிப்பு இருந்தால் அதை அகற்ற வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதன்படி, கொளத்தூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அனுப்பிய நோட்டீசை எதிர்த்து கோயிலின் பரம்பரை அறங்காவலர் கே.பி.என்.மகேஸ்வர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், ஆர்.ராஜேஷ் விவேகானந்தன் ஆகியோர் விசாரித்தபோது, அப்பகுதியில் குடியிருக்கும் ஜெகதாம்பாள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் எம்.பி.ராஜவேலாயுதம்,'' மனுதாரர் மகேஸ்வர் கோவிலின் பரம்பரை அறங்காவலர் இல்லை. அதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

பொது வழிகள் தடுக்கப்பட்டுள்ளன. மாற்றுத் திறனாளிகள் வாகனங்கள் மற்றும் ஆம்புலன்ஸ் வாகனங்கள் கூட செல்ல முடியவில்லை. அதனால், ஆக்கிரமிப்புகளை அகற்றவேண்டும் என்ற உத்தரவை உறுதிசெய்ய வேண்டும்'' என்று வாதிட்டார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள், ''ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்காக பேரூராட்சி அனுப்பிய நோட்டீசில் எந்த தவறும் இல்லை. அரசு புறம்போக்கு நிலங்கள் மற்றும் பொது பயன்பாட்டில் உள்ள அரசு நத்தம் நிலங்களில் உள்ள அனைத்து ஆக்கிரமிப்புகளையும் கண்டறிந்து, அவற்றை அகற்றவேண்டும். இந்த பணிகளை 8 வாரங்களில் முடிக்க வேண்டும்'' என்று மாவட்ட நிர்வாகத்திற்கு அறிவுறுத்தி பரம்பரை அறங்காவலர் எனக் கூறி மகேஸ்வர் தாக்கல் செய்த வழக்கை தள்ளுபடி செய்தனர்.





Oasis Grace
Engineering Projects Pvt Ltd
Build Your Future With Us
RTN.DR.R.SATHYANARAYANAN,
Director - Business Development
+91 9360136897 / +91 8148231942
No.15, North Mada Street, Srinagar Colony, Saidapet, Chennai-600015
www.oasisgrace.in | business@jmrgroup.org

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
8148231942 / 8144337349
11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.

மேற்கு ஆசியாவில் உள்ள அமெரிக்கர்களுக்கு எச்சரிக்கை!!!



சென்னை – 8 நவம்பர், 2026 மேற்கு ஆசியாவில் இருக்கும் அமெரிக்கர்களுக்கு அந்நாட்டு அரசு போர் அபாய எச்சரிக்கை விடுத்துள்ளது. ஈரான் ஆதரவு பெற்ற ஹவதிக்களால் அமெரிக்கா அதிகாரிகள் தாக்குதல்களுக்கு ஆளாகலாம் என அமெரிக்க கூறியுள்ளதால் பரபரப்பு நிலவுகிறது.15 நாடுகளுக்கு செல்ல வேண்டாம் என்று அமெரிக்கர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

சவுதி அரேபிய,ஈரான்,இஸ்ரால்,ஈராக்,கத்தார். யூஏ,ஏமன், சிரியா,ஓமான்,லெபனான்,குவைத், ஜோர்டன், எகிப்துக்கு தற்போது தடை விதிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா கட்டமைப்புகளை ஈரான் குறிவைக்கக்கூடும் என்று ட்ரம்ப் அரசு ஏற்கனவே எச்சரிக்கை குறிப்பிடத்தக்கது. இஸ்ரேலில் உள்ள அமெரிக்கா கட்டைமைப்பையும் ஈரான் குறிவைக்கலாம் என்று ட்ரம்ப் அரசு குடிமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்நிலையில் ஈரான் போர் மேலும் தீவிரம் அடையுமா என்ற எதிர்பார்ப்பு எழுந்திருக்கிறது.

இடைக்கால தேர்தலுக்கு பிறகு ட்ரம்ப் ஈரான் போரை தீவிரப்படுத்தலாம் என்ற நிலையில் இந்த எச்சரிக்கை எடுத்துக்கொள்ளப் படுகிறது.தீவிரவாத தாக்குதல் கடத்தல், அபாயம் இருப்பதால் ஈரானுக்கு பயணிக்க வேண்டாம் என்று குடிமக்களுக்கு அமெரிக்கா எச்சரிக்கை விடுத்திருக்கிறது. ஈரானில் உள்ள அமெரிக்கர்களை உடனே வெளியேற ட்ரம்ப் அரசு அக் 23 -ல் எச்சரிக்கை விடுத்ததும் குறிப்பிடத்தக்கது.

இரவுநேர சேவைக்கு பச்சைக் கொடி எப்போது? சேலம் விமான நிலைய விரிவாக்க பணிகள் முடக்கம்: நிலம் கையகப்படுத்த தொழில் துறையினர் கோரிக்கை

சேலம் – 8 நவம்பர், 2026 சேலம் விமான நிலைய விரிவாக்கப் பணிகளுக்கான நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கையை தமிழ்நாடு அரசு விரைவுபடுத்த வேண்டும் என்று தொழில் துறையினர் தீவிர வலியுறுத்தல் விடுத்துள்ளனர்.

சேலம் அடுத்த கமலாபுரத்தில் 136 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள விமான நிலையம், 1,800 மீட்டர் நீள ஓடுபாதையுடன் செயல்பட்டு வருகிறது. இங்கு சிறிய ரக ஏடிஆர் மற்றும் பாம்பார்டியர் விமானங்கள் மட்டுமே தரை இறங்க முடியும்.

இதனால் ஒரு மணி நேரத்திற்கு ஒரு விமானம் மட்டுமே இயக்கக்கூடிய சூழல் பல ஆண்டுகளாக நீடிக்கிறது. விமான நிலைய விரிவாக்கத்திற்காக நிலம் கையகப்படுத்தும் முயற்சிக்கு விவசாயிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர். இதனால் 2018ம் ஆண்டு மற்றும் 2022ம் ஆண்டுகளில் கொண்டு வரப்பட்ட திட்டங்கள் அடுத்தடுத்து முடங்கின.

இதையடுத்து முதல் கட்ட விரிவாக்கப் பணிக்காக 2025ம் ஆண்டு நவம்பர் 17ம் தேதி 206.17 ஏக்கர் நிலத்தை ரூ.364.85 கோடி மதிப்பீட்டில் கையகப்படுத்த தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்தது. ஆனால் நில உரிமையாளர்களின் தொடர் பிரச்னை காரணமாக நிலத்தை ஒப்படைக்கும் பணிகள் இன்னமும் முடிவடையாமல் தேக்கமடைந்துள்ளது.

இந்த சூழலில் விமான நிலையத்தை தரம் உயர்த்துவது குறித்து இந்திய தொழில் கூட்டமைப்பின் சேலம் மண்டல தலைவர் பூபாலன் கூறும்போது, 'விமான நிலையத்தை விரிவாக்கம் செய்வதன் மூலம் கூடுதல் விமானங்களை இயக்கவும், முக்கிய வர்த்தக நகரங்களுக்கான இணைப்பை மீண்டும் பெறவும் முடியும்; 2035ம் ஆண்டிற்குள் சேலத்தை உலகத்தரம் வாய்ந்த தொழிற்துறை மையமாக மாற்ற இந்த திட்டம் மிகவும் அவசியமானது' என்று கூறினார்.



இதற்கிடையே ரூ.50 கோடி செலவில் முனைய கட்டிடத்தை விரிவுபடுத்தும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளதாக சேலம் விமான நிலைய இயக்குனர் நவுஷாத் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறும்போது, 'விமான நிலைய விரிவாக்கத்திற்கு முதலில் 170 ஏக்கர் நிலம் கோரப்பட்ட நிலையில், அரசு சுமார் 210 ஏக்கர் ஒதுக்கீடு செய்ய உத்தரவிட்டும் இதுவரை இந்திய விமான நிலைய ஆணையத்திடம் நிலம் ஒப்படைக்கப்படவில்லை; ஐதராபாத் மற்றும் பெங்களூரு போன்ற முக்கிய வழித்தடங்களில் தனியார் நிறுவனங்கள் மீண்டும் விமான சேவையை தொடங்க வாய்ப்புள்ளது' என்று கூறினார். எனவே நிலத்தை விரைந்து ஒப்படைத்து விமான நிலையத்தை முழு பயன்பாட்டிற்கு கொண்டு வர அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

இந்திய சர்வதேச திரைப்பட விழா 'வேவ்ஸ் பஜார்' கண்காட்சியில் பங்கேற்க புத்தொழில் நிறுவனங்களுக்கு அழைப்பு

சென்னை – 8 நவம்பர், 2026 கோவாவில் நடைபெறவுள்ள 2026-ம் ஆண்டுக்கான இந்திய சர்வதேசத் திரைப்பட விழாவின் ஒரு பகுதியாக, 'வேவ்ஸ் பஜார்' கண்காட்சியில் வேவ்ஸ் எக்ஸ் என்ற புத்தொழில் நிறுவனங்களின் அரங்கு இடம்பெறவுள்ளது. இதில் பங்கேற்கத் திரைப்படம், அது சார்ந்த தொழில்நுட்பத் துறைகளில் செயல்படும் நிறுவனங்களிடம் மத்திய தகவல், ஒலிபரப்பு அமைச்சகம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

திரைப்படம், ஊடகம் சார்ந்த புதிய தொழில்நுட்பங்கள், தயாரிப்புகள், தீர்வுகள் ஆகியவற்றைச் சர்வதேச அளவில் அறிமுகப்படுத்தவும், உலக அளவில் திரைப்பட இயக்குநர்கள், தயாரிப்பு நிறுவனங்கள், முதலீட்டாளர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தவும் இக்கண்காட்சி வாய்ப்பளிக்கும்.

உள்நாட்டு தொழில் மேம்பாட்டு துறையான டிபிஐஐடி-யில் பதிவு செய்துள்ள தகுதியான புத்தொழில் நிறுவனங்கள் விண்ணப்பிக்கலாம். வேவ்ஸ் எக்ஸ் அமைக்கும் தேர்வுக்குழு விண்ணப்பங்களைப் பரிசீலித்து நிறுவனங்களைத் தேர்வு செய்யும்.


வேவ்ஸ் எக்ஸ் என்பது ஊடக, பொழுதுபோக்குத் துறையில் புதிய தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் மத்திய அரசின் புத்தொழில் மேம்பாடு, தொழில் பாதுகாப்புத் திட்டமாகும்.

ஜெம் வீரமணி மீது மேலும் ஒரு சிறுமி பாலியல் புகார்.

சென்னை – 8 நவம்பர், 2026 சென்னை பெருநகர காவல்துறையின் விபச்சார தடுப்பு பிரிவில் சிறுமிகளுக்கு பாலியல் துன்புறுத்தல் கொடுத்து, அதன் பேரில் பதிவு செய்திருந்த எட்டு வழக்குகளில், எதிரி ஜெம் வீரமணி 8 வழக்குகளிலும், எதிரி சாந்தி 3 வழக்குகளிலும், எதிரி மகேந்திரசிம்ஹன் 2 வழக்குகளிலும், எதிரி லாசர் 5 வழக்குகளிலும், எதிரி கணேசன் 2 வழக்குகளிலும், எதிரி சீனிவாசன், சக்திவேல், பாபு மற்றும் பார்த்திபன் ஆகியோர்கள் தலா 1 வழக்கிலும் கைது செய்யப்பட்டு அனைவரும் சென்னை, புழல் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருந்த ஒரு வழக்கில், சாட்சியாக இருந்த ஒரு சிறுமி, தானும் எதிரி ஜெம் வீரமணியால் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளானதாகக் கொடுத்த வாக்குமூலத்தின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எதிரி ஓட்டுநர் லாசரை ஒரு நாள் போலிஸ் காவலில் எடுத்து விசாரித்து, அதன்பேரில் பாலியல் குற்ற சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட வெள்ளை நிற Camry Car அடையாளம் காணப்பட்டு, வழக்கில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



மேலும் குற்ற எண்-11/2026 வழக்கில் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ரூ.2,00,000 (ரூபாய் இரண்டு லட்சம்) நிவாரண நிதியை தமிழக அரசு வழங்க, கனம் போக்சோ நீதிமன்ற நீதிபதி அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

மொத்தம் பதிவான எட்டு வழக்குகளில், இரண்டு வழக்குகளில் இறுதி அறிக்கை வரும் வாரத்தில் தாக்கல் செய்யப்பட உள்ளது.

சிறப்புத் தூய்மை இயக்கத்தை வெற்றிகரமாக நிறைவு செய்தது எஃகுத் துறை

சென்னை – 8 நவம்பர், 2026 மத்திய எஃகுத் துறை அமைச்சகம், நிலுவையில் உள்ள பணிகளை முடிப்பதற்கான ஆறாவது சிறப்புத் தூய்மை இயக்கத்தை, 2026 அக்டோபர் 2 முதல் 31 வரை வெற்றிகரமாக நடத்தியது.

எஃகு துறையில் இந்த இயக்கத்தின் முக்கிய சாதனைகள்:

* பொதுமக்களின் புகார்கள், மேல்முறையீடுகளுக்குத் தீர்வு காண நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 100% எட்டப்பட்டது.
* 21,164 பழைய காகிதக் கோப்புகள் ஆய்வு செய்யப்பட்டன. அவற்றில் 17,107 தேவையற்ற கோப்புகள் அகற்றப்பட்டன.
* இலக்காக நிர்ணயிக்கப்பட்ட 301 தூய்மைப் பணிகளும் முழுமையாக மேற்கொள்ளப்பட்டன.
* தேவையற்ற பழைய பொருட்கள் அகற்றப்பட்டதன் மூலம் சுமார் 17,501 சதுர அடி அலுவலக இடம் காலி செய்யப்பட்டது.

நிர்வாகத் திறனை மேம்படுத்துதல், தூய்மையைப் பேணுதல், வெளிப்படைத்தன்மையையும் சிறந்த நிர்வாகத்தையும் உறுதி செய்தல் ஆகியவற்றில் தொடர்ந்து கவனம் செலுத்தப்படும் என எஃகுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

MM கிளினிக்
அரசு மூத்த மருத்துவ அதிகாரி
காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை - முதல் முறை இந்த நோட்டீசை கொண்டுவருபவர்களுக்கு சிகிச்சை இலவசம்
8668018731
அழகிரி நகர் மெயின் ரோடு, வடபழனி, சென்னை - 26.